“விசும்பின் துளி வீழின் அல்லால்–மற்றாங்கே
பசும்புல் தலை காண்பதரிது “

– திருவள்ளுவர் .

# அருப்புக்கோட்டை நகராட்சி
# நிர்வாக அறிக்கை 2018–2019

## அமைப்பும் பொது நிர்வாகமும் :

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்களின் ஆளுகைக்குட்பட்ட பழமையான ஊர் அருப்புக்கோட்டை. பண்டைய மன்னர்களின் அடையாளச் சின்னங்களாக நகரின் அனைத்துப் பகுதிகளிலும், மிகப் பழமையான கோவில்கள் அமைந்திருப்பது நகரின் குறிப்பாகும். அது மட்டுமின்றி இஸ்லாமிய மதத்தினரும், கிறிஸ்துவ மதத்தினரும் அவரவர் தழுவிய மதங்களை வணங்கவும், வளர்க்கவும் மசூதிகளும், தேவலாங்களும் நகரில் ஆங்காங்கே அமைந்திருப்பது மத நல்லிணக்கத்திற்கு சான்றாகும். ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 28.01.1947ம் நாளிட்ட ஆணை எண்.1978ல், நகர பஞ்சாயத்தாக இருந்ததை, ’’ 01.04.1948ம் தேதி முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும்,’’ 07.07.1953ம் தேதிய உள்ளாட்சித் துறை அரசாணை எண்.363ல்,’’ 01.04.1953ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும்’’ உயர்த்தப்பட்டது. 02.06.1979ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசு ஆணை எண்.876ன்படி 02.06.1979 முதல் முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு அறிக்கை ஆண்டிலும், முதல்நிலை நகராட்சியாக தொடர்ந்து இருந்து வருகிறது

இந்நகராட்சி எல்லைக்குள் பெரிய புளியம்பட்டி, சின்னபுளியம்பட்டி, அருப்புக்கோட்டை ஆகிய மூன்று வருவாய் உட்கடை (Revenue Hamlet Villages) கிராமங்கள் உள்ளன. இந்நகராட்சியின் பரப்பு 14.96 ச.கிலோ மீட்டரில் அடஙகியுள்ளது, அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் எல்கையில் யாதொரு மாற்றமும் இல்லை.

நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.135 நாள் 11.06.1996ன்படி இந்நகராட்சி 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் ஒதுக்கீடு விவரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 1) தாழ்த்தப்பட்ட(பொது ) | .. ஒரு வார்டு |
| 2) தாழ்த்தப்பட்ட( பெண்கள்) | .. 2 வார்டுகள் |
| 3) பெண்கள் பொது | .. 16 வார்டுகள் |
| 4) ஆண்கள் பொது | .. 17 வார்டுகள் |

2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை எண்ணிக்கை 84,029 ஆக இருந்தது. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 87,722 (ஆண்கள் 43,558, பெண்கள் 44,164) என கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலகம், சென்னையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## (2) நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள்:–

(அ) இந்நகர் மன்றத்தின் முதல் நகர்மன்றத் தலைவராக பணிபுரிந்து பெருமை பெற்றவர் திரு.வி.ஏ.எஸ்.சங்கரலிங்க மூப்பனார் ஆவார். பின்னர் அரசினரின் உத்திரவுப்படி 03.03.1991ம் தேதி பிற்பகல் முதல் நகர்மன்றம் கலைக்கப்பட்டதால் ஆணையாளர் அவர்களே தனி அதிகாரியாக 20.10.1996ம் தேதி முற்பகல் வரை நகர்மன்ற தலைவர் பொறுப்பையும் கூடுதலாக நிர்வகித்து வந்துள்ளார். 25.10.1996ம் தேதி முதல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் நிர்வகித்து வந்தனர். அறிக்கை ஆண்டில் இந்நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வந்தது .

17.10.2011ல் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற தேர்தலின்படி 27.10.2011 முதல் 24.10.2016 முடிய திரு.ச.சிவப்பிரகாசம்,எம்.எஸ்சி., நகர்மன்றத் தலைவராகவும், திரு.ஆர்.தமிழ்காந்தன் நகர்மன்றத் துணைத் தலைவராகவும், மற்றும் 35 நகர்மன்ற உறுப்பினர்களும் பதவி வகித்து வந்தனர்.

கீழ்க்கண்ட விவரப்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்து வந்தனர்.

| வ.எண். | வார்டு எண் | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | திரு.எஸ்.மணிவண்ணன் |
| 2 | 2 | திருமதி.வி.நாகலட்சுமி |
| 3 | 3 | திருமதி.ஜெ.பொன்னாம்பிகை |
| 4 | 4 | திரு.எ.சுப்பிரமணியம் |
| 5 | 5 | திரு.எம்.முருகேசன் |
| 6 | 6 | திருமதி.எ.சுல்தானியா பேகம் |
| 7 | 7 | திரு.எம்.சிக்கந்தர் |
| 8 | 8 | திரு.எஸ்.வீரராஜ் |
| 9 | 9 | திரு.டி.நாகராஜன் |
| 10 | 10 | திரு.ஆர்.ரமேஷ்குமார் |
| 11 | 11 | திரு.என்.அண்ணாமலை |
| 12 | 12 | திரு.கே.வி.டி.ராஜாராம் |
| 13 | 13 | திரு.மு.ராஜேந்திரன் |
| 14 | 14 | திரு.கு.குணசேகரன் |
| 15 | 15 | திருமதி.ரா.நிர்மலா |
| 16 | 16 | திரு.து.மதிவாணன் |
| 17 | 17 | திரு.ச.இராமமூர்த்தி |
| 18 | 18 | திரு.ர.கிருஷ்ணவேணி |
| 19 | 19 | திரு.ப.பெ.ந.ந.தமிழகன் |
| 20 | 20 | திரு.ஏ.செல்வேந்திரன் |
| 21 | 21 | திருமதி.ப.நாகேஸ்வரி |
| 22 | 22 | திருமதி.எம்.முத்துமாரி |
| 23 | 23 | திரு.ரா.தமிழ்மணி |
| 24 | 24 | திரு.ஆர்.தமிழ்காந்தன் |
| 25 | 25 | திருமதி.பி.தெய்வரத்தினம் |
| 26 | 26 | திரு.என்.சம்பத் |
| 27 | 27 | திரு.க.கலுசிவலிங் கம் |
| 28 | 28 | திரு.ஆர்.ராமச்சந்திரன் |
| 29 | 29 | திரு.எம்.கண்ணன் |
| 30 | 30 | திருமதி.சி.பிரேமா |
| 31 | 31 | திருமதி.என்.செல்லத்தாய் |
| 32 | 32 | திருமதி.எ.மஞ்சுளா |
| 33 | 33 | திருமதி.எ.மீனாட்சி |
| 34 | 34 | திருமதி.வே.கலைச்செல்லி |

**5) அலுவலக மேலாண்மை:–**

இந்நகராட்சியின் பொது நிர்வாகப் பிரிவு அலுவலக முன்பகுதி கட்டிடத்தில், போதுமான காற்றோட்ட வசதியுடன் இயங்கி வருகிறது. பொதுமக்கள் வந்து செல்லவும், குறைபாடுகள் நிவர்த்தி செய்ய விண்ணப்பம் சமர்ப்பிக்க, தபால் பெட்டி வசதியும் உள்ளது. பொது நிர்வாகப் பிரிவில் கீழ்க்கண்டவாறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

| வ.எண். | பதவி | எண்ணிக்கை | காலியிடங்கள் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 1 (வகுப்பு 2) | – – |
| 2 | கணக்கர் | 1 (வகுப்பு 4 ) | – – |
| 3 | உதவியாளர்கள் | 2 (வகுப்பு 5) | – – |
| 4 | இளநிலை உதவியாளர்கள் | 12 (வகுப்பு 7) | – – |
| 5 | தட்டச்சர் | 1 (வகுப்பு 7ஏ) | – – |
| 6 | பதிவறை எழுத்தர் | 2 (வகுப்பு 10) | – – |
| 7 | அலுவலக உதவியாளர்கள் | 10 | – – |
| 8 | அலுவலக இரவுக்காவலர் | 1 | – – |
| 9 | சந்தைக் காவலர் | 1 | –– |

**வருவாய் பிரிவு**

| வ.எண். | பதவி | எண்ணிக்கை | காலியிடங்கள் |
|---|---|---|---|
| 1 | வருவாய் ஆய்வர்கள் | 2 | – – |
| 2 | வருவாய் உதவியாளர்கள் | 12 | –– |
| 3 | அலுவலக உதவியாளர்கள் | 3 | 2 |

**6) முறையீடுகள்:–**

அறிக்கை ஆண்டில் ஆணையரது ஆணைகளின் மீது நகராட்சி ஊழியர்கள் மேல்முறையீடுகள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. பணியாளர்களின் வேலை திறமை சரிவர கண்காணிக்கப்பட்டிருக்கிறது. கடைநிலை ஊழியர்கள் எவ்வித நிர்பந்தமும் இல்லாது அவரவர்களுக்கு ஒதுக்கீடு செய்த பணியினை செவ்வனே செய்து வந்துள்ளனர்.

**7) இடவசதிகள்:–**

இந்நகராட்சி அலுவலக வளாகத்தின் மொத்த பரப்பு 3.26 ஏக்கர் ஆகும். நகராட்சி அலுவலகம் ஏற்கனவே உள்ள அலுவலகக் கட்டிடத்திலேயே தொடர்ந்து அறிக்கை ஆண்டிலும் இயங்கி வந்துள்ளது. இதில் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளது. கட்டிடம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பொது சுகாதார துறை கட்டிடத்தை முற்றிலும் மாற்றி கணணி வரிவசூல் மையமாக 01–04–2004ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையாளர், பொறியாளர் மற்றும் நகர் நல அலுவலர் ஆகியோருக்கு தனித் தனி அலுவலக அறை உள்ளது. நகராட்சி பொதுப் பிரிவிற்கென ஒரு வளாகமும், நகரமைப்பு, பொறியியல் பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவிற்கென தனித்தனி வளாகங்களும் ஒன்றுக்கொன்று இணைப்பாக உள்ளது. ஆவணங்கள் வைப்பதற்கு தனியே ஆவணக் காப்பறை உள்ளது. நகர்மன்றத்திற்கென அலுவலக முதல் மாடியில் ஒரு வளாகம் உள்ளது. நகர்மன்றத் தலைவருக்கென ஒரு குளிர்சாதன வசதியுடன் கூடிய அறை உள்ளது. வாகனங்கள் நிறுத்துவதற்கு ஒரு இடமும், பொது மக்கள் வந்து வசதியாக தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள போதுமான இட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**தகவல் மற்றும் சேவை மையம்:**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகளை பெறுவதற்கும் சொத்துவரி பெயர் மாற்றம் புதிய வரிவிதிப்பு, கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பம் மற்றும் கடைகளுக்கு உரிமம் கோரும் விண்ணப்பம் போன்ற நகராட்சி தொட  பான அனைத்து படிவங் கள் மற்றும் சான்றிதழ்களை பொது மக்கள் எளிய முறையில் அணுகி பெற்றுச் செல்வதற்காக தகவல் மற்றும் சேவை மையமானது நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி 25.12.97 தேதி முதல் செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டிலும் தொடர்ச்சியாக சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்பட்டு வருகிறது .

**8) வழக்குகள், நகர்மன்ற வழக்கறிஞர் :–**

நகர்மன்ற தீர்மானம் எண்.259 நாள் 30.04.2007ன்படி திரு.டி.சங்கரன்,பி.ஏ.பி.எல்., நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டு அறிக்கை ஆண்டு முதல் நாளது தேதி வரையில் பணி செய்து வருகிறார்.

**9) வழக்குகள் விபரங் கள்:–**

2018–2019ம் அனைத்து பிரிவு எழுத்தர் அறிக்கை ஆண்டில் நிலுவையில் உள்ள வழக்கு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) சொத்துவரி சம்பந்தமானது | .. | 23 |
| 2) நகரமைப்பு சம்பந்தமானது | .. | 35 |
| 3) நிர்வாகம் (பணியமைப்பு) | .. | 6 |
| 4) இதரம் | .. | 2 |
| **மொத்தம்** | .. | **66** |

நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

**10) பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு பணியாளர்கள்.**

அ) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் உதவி செயற் பொறியாளர் நிலையில் ஒரு நகராட்சி பொறியாளர் பணியிடமும், இளநிலை பொறியாளர் அந்தஸ்தில் ஒரு பணியிடம் உள்ளது. அறிக்கையாண்டில் 14.5.2018 முதல் 31.03.2019 முடிய திரு.ஜி.சேர்ம்க்கனி , நகராட்சி பொறியாளர் பதவியிலும் 29.06.2018 முதல் 08.08.2018 வரை ஆணையாளர் கூடுதல் பொறுப்பாகவும் வகித்து வந்துள்ளார். இவர் பொறியியற் பிரிவு தொடர்பான அனைத்து வேலைகளையும் கண்காணித்து வருகிறார். கட்டிடம் கட்டும் வேலை, சாலைகளை சார்ந்த வேலை, தனியார் வீடுகளுக்கு குடிநீர் விநியோக பராமரிப்பு, இணைப்புகள் வழங் குவது பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், திட்ட பராமரிப்பு வேலைகள், வாறுகால் கட்டுவது ஆகியவைகளை உதவி பொறியாளர் மற்றும் வரைவாளர் கண்காணிக்கிறார்கள்.திருமதி.கு.காளீஸ்வரி என்பவர் உதவிப் பொறியாளராகவும், திருமதி.டி.சுமதி என்பவர் வரைவாளாராகவும், திரு.பாலமுருகன் மற்றும் திரு.செல்வராஜ் ஆகிய இருவரும் பணி ஆய்வராளர்களாகவும் பணிபுரிந்து வருகிறார்.

**ஆ) பொறியியற் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.**

| | | |
|---|---|---|
| 1) வரைவாளர் | .. | 1 |
| 2) டிரைவர் | .. | 6 |
| 3) மின் கம்பியாளர் | .. | 3 |
| 4) மின் உதவியாளர் | .. | 3 |
| 5) காவலர் | .. | 2 |
| 6) பம்ப்ரூம் அட்டெண்டர்கள் | .. | 3 (3 பணியிடம் காலியாக உள்ளது) |
| 7) பைப் மஸ்தூர்கள் | .. | 5 (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| 8) பணி ஆய்வாளர்கள் | .. | 2 |
| 9) மீட்டர் ரீடர் | .. | 1 (பணியிடம் காலியாக உள்ளது) |
| 10) கேங் க் கூலி | .. | 5 (2 பணியிடம் காலியாக உள்ளது) |

**ஆ) குடிநீர் பிரிவு பணியாளர்கள்**

திருப்புவனம் (தலைமை நீரேற்று நிலையம்) மற்றும் குடிநீர் தலைப்பிடம்

| | | |
|---|---|---|
| 1) பிட்டர்கள் | .. | 3 (1 பணியிடம் காலியாக உள்ளது) |

**11) சாலைகள்,பாலங் கள் பரிசல் துறைகள் கட்டிடங் கள்:–**

**அ) சாலைகளும் பாலங் களும்**

அறிக்கையாண்டில் 104.560 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளது. அறிக்கை ஆண்டின் இறுதியில் மொத்த சாலைகளின் நீளம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| | | கி.மீட்டர் |
|---|---|---|
| 1) சிமிண்ட் காங் கிரீட் சாலை | .. | 51.515 |
| 2) தார்சாலை | .. | 45.715 |
| 3) கருங் கல் ஜல்லிசாலை | .. | – – |
| 4) ஜல்லி போடாத சாலை(மண்சாலை) | .. | 7.330 |
| | மொத்தம் | 104.560 |

சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகர் எல்லைக்குள் மதுரை–தூத்துக்குடி சாலையும், விருதுநகர்–திருச்சுழி சாலையும் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்குச் சொந்தமான கற்பாறைகள் கிடையாது. இந்நகருக்கு தென்கிழக்கில் சுமார் 6 கி.மீ.தூரத்திலுள்ள மல்லம்பட்டி பகுதியில் கல்குவாரி உள்ளது.

**ஆ) பரிசல் துறைகள்:**

இந்நகராட்சில் பரிசல் துறைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**இ) கட்டிடங் கள்:–**

இந்நகராட்சியில் புதிய கட்டிடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ் அரசினரின் முழு மானயம் பெற்று நகராட்சி அலுவலக வளாகத்தில், கூடுதலாக நகர்மன்ற கூட்ட அரங் குடன் கூடிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

12) தங்கும் விடுதிகளும் சத்திரங்களும்:–

அ) அறிக்கை ஆண்டில் தங்கும் விடுதிகள் புதிதாக தோற்றுவிக்கப்படவில்லை. ஏற்கனவே உள்ள தங்கும் விடுதி நன்கு செயல்படாததால் சிறிய அளவில் பராமாப்புப் பணிகள் மேற்கொண்டு ஆணையாளர் குடியிருப்பாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆ) நகராட்சி பொறியியல் பிரிவு வாகனங்கள்:–

இந்நகராட்சி பொறியியல் பிரிவுக்கென சாலை உருளைகள் ஏதும் சொந்தமாக இல்லை. எனவே இந்நகரிலுள்ள நெடுஞ்சாலைத் துறையினர் மற்றும் தனியார்களிடமிருந்து சாலை உருளைகள் வாடகைக்குப் பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. நகராட்சி எல்லைக்குள் புறநகர் பகுதிகளில் மற்றும் தண்ணீர் இணைப்புகள் இல்லாத இடங்களில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு 6000 லிட்டர் மற்றும் 10000 லிட்டர் கொள்ளவுகளில் இரண்டு டேங்கருடன் கூடிய லாரிகள் இயக்கம் செய்யப்படுகின்றன. மணல் எடுத்துச் செல்வதற்கும் சாலைக் கருவிகள் எடுத்து செல்வதற்கும் ஓர் வாகனம் உள்ளது. சாலை பராமரிப்புக்கென அவை பயன்படுத்தப்பட்டு வருகிறது. திருப்புவனத்தில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் ஏற்படுகிற பழுதுகளை உடனடியாக பார்க்கவும் கட்டங்குடி மற்றும் குடிநீர் பிரதான குழாய் வழித்தடங்களை நேராய்வு செய்யவும் பணிகளை சீராக செய்வதற்கும் ஒரு ஈப்பு வாகனம் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

13) விளக்கு வசதிகள்:–

| வ.எண் | மின் விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் மின் விளக்குகள் | 2668 |
| 2 | 250 வாட்ஸ் சோடியம் வேப்பர் ஆவி விளக்குகள் | 116 |
| 3 | 150 வாட்ஸ் சோடியம் வேப்பர் ஆவி விளக்குகள் | 63 |
| 4 | 70 வாட்ஸ் சோடியம் வேப்பர் ஆவி விளக்குகள் | 164 |
| 5 | (4x24) வாட்ஸ் எனர்ஜி சேவர் T5 விளக்குகள் | 153 |
| 6 | 1x36 வாட்ஸ் எனர்ஜி சேவர் CFL விளக்குகள் | 358 |
| 7 | உயர்கோபுர விளக்குகள் (400 வாட்ஸ் மெட்டல் ஹலைடு) | 3 |
| 8 | 80 வாட்ஸ் LED விளக்குகள் | 13 |
| 9 | 60 வாட்ஸ் LED விளக்குகள் | 51 |
| 10 | 24 வாட்ஸ் LED விளக்குகள் | 150 |
| 11 | 96 வாட்ஸ் LED விளக்குகள் | 14 |
| மொத்தம் | | 3753 |

நடப்பு ஆண்டு முடிய மின் கட்டணம் ஏதும், நிலுவையின்றி மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

14) கல்வி:–

இந்நகராட்சியின் கீழ் செயல்பட்டு வந்த 1 உயர்நிலைப் பள்ளியும், 2 நடுநிலைப் பள்ளியும் மற்றும் 2 துவக்க பள்ளியும் 01.04.90ம் தேதி முதல் அரசு ஆணைப்படி அரசிற்கு (கல்வித்துறை) ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. பள்ளிக் கூடங்கள் அனைத்திற்கும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளன.

**(அ) பள்ளி மதிய உணவுத்திட்டம்:–**

நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மதிய உணவுத் திட்டம் 14.09.1982ம் தேதி வரை செயல்பட்டு வந்தது. 15.09.1982ம் தேதி முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 6ம் வகுப்பு முதல் 8வது வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு இந்நகராட்சியின் 1 உயர்நிலைப் பள்ளியிலும், 2 நடுநிலைப் பள்ளியிலும் மற்றும் 3 துவக்க பள்ளியிலும் தனித் தனியே செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு நகராட்சி பள்ளிகளிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங் க சத்துணவு பணியாளர்கள் பின்வருமாறு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். சத்துணவுப் பணியாளர்கள் அனைவருக்கும் தொகுப்பு ஊதியம் வழங்கியதை நிறுத்தி காலமுறை ஊதியம் அரசினரால் நிர்ணயம் செய்யப்பட்டு வழஙகப்பட்டு வருகிறது. இந்நகராட்சி தெற்குதெரு துவக்க பள்ளியானது போதிய மாணவர் வருகையின்மையால் விருதுநகர் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.4048/ஆ3 நாள்: 05.09.2012ன்படி பள்ளியானது மூடப்பட்டதால் தற்போது இந்நகராட்சியின் கீழ் 1 உயர்நிலைப் பள்ளியும், 2 நகராட்சி நடுநிலைப் பள்ளியும், 2 நகராட்சி துவக்கப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது.

| | **பணியிடங் கள் ஒதுக்கீடு** | **தற்போது உள்ளவர்** | **காலியிடம்** |
|---|---|---|---|
| சத்துணவு பொறுப்பாளர் | 5 | 3 | 2 |
| சமையலர் | 5 | 4 | 1 |
| சமையல் உதவியாளர் | 5 | 4 | 1 |

இத்திட்டத்தின்கீழ் மாணவ மாணவிகளுக்கு சத்துணவு தினசரி வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் சம்பளம் வழங்கியது, சத்துணவு தயாரிக்கவும், மதிப்பூதியம் வழங் கியதும் சேர்த்து ஏற்பட்ட செலவினம் அரசினரிடமிருந்து இந்நிதியாண்டில் மானியமாக ரூ.341830/– பெறப்பட்டுள்ளது. 1.4.2012 முதல் கிளை கருவூலம் மூலம் மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங் கப்பட்டு வருகிறது.

**(ஆ) குழந்தைகள் சத்துணவுத்திட்டம்:–**

2 முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கத் திட்டம் 15.09.1982ம் தேதி முதல் இந்நகராட்சியில் அமுல் செய்யப்பட்டு 25 சத்துணவு மையங்கள் இயங்கி வந்தன.

அரசு ஆணை எண் 17 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறை நாள் 30.12.2003ன்படி குழந்தைகள் சத்துணவுத் திட்டப் பணி அரசு குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டபடியால் 2+4 குழந்தைகள் நல மைய பணியாளர்கள் 24.03.2004 முதல் அருப்புக்கோட்டை குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

**15) முதியோர் கல்வி:–**

இந்நகராட்சியில் முதியோர் கல்வி நிலையங்கள் ஏதும் பராமரிப்பு செய்யப்படவில்லை.

**16) உயர்நிலைப்பள்ளி வசதி:–**

(அ) இந்நகராட்சி நிர்வாகத்தின்கீழ் ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஒரு அரசினர் உயர்நிலைப் பள்ளியும் நான்கு தனியார் மேல்நிலைப் பள்ளிகளும் நகரில் கல்விப் பணி மேற்கொண்டு வருகிறது .

## (ஆ) கல்லூரிக் கல்வி

இந்நகராட்சி எல்லைக்குள் இரண்டு தனியார் கலைக் கல்லூரிகள் உள்ளன. தனியார் பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றும் தனியார் தொழிற் பயிற்சி பள்ளியும் உள்ளன. இந்நகர் எல்லைக்கு சற்று வெளியே தனியாரரால் நடத்தப்படும் பொறியியல் கல்லூரி ஒன்றும் உள்ளது.

## 17 ) சித்த வைத்திய மருத்துவ உதவி:–

இந்நகராட்சியில் சித்த வைத்தியசாலை மருத்துவ நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. திருமதி.பி.திலகம் 25.06.98 முதல் தொடர்ந்து அறிக்கை ஆண்டில் மருத்துவ அதிகாரியாக பணி செய்து வருகிறார். நடப்பு ஆண்டில் மொத்தம் 33550 பேர் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றனர். இதில் ஆண்கள் 10353 பெண்கள்15563 குழந்தைகள் 7634 பேரும் ஆவார்கள். சித்த மருத்துவமனைக்கு TAMPCOL,சென்னையிலிருந்து மருந்துகள் வாங்கப்படுகிறது. மேலும் 2 மாதஙகளுக்கு ஒரு முறை 47 பள்ளிகள் 28 அஙகன்வாடிகளுக்கு 5 நாட்கள் தொடர்ச்சியாக நிலவேம்பு குடிநீர் வழஙகப்படுகிறது. மேலும் காய்ச்சல் பாதிந்த பகுதிகளிலும் நிலவேம்பு கடிநீர் வழஙகப்படுகிறது. மேலும்அரசு மேற்பார்வையில் நடுத்தர மருத்துவ நிலையம் நவீன வசதிகளுடன் நடத்தப்பட்டு வருகிறது. இம்மருத்துவ நிலையம் இந்நகர் மக்களுக்கும் மற்றும் இந்நகரை சுற்றியுள்ள கிராமங்களில் குடியிருப்பவர்களுக்கும் வைத்திய சேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது.

நகராட்சியால் பராமரிப்பட்டு வரும் சித்த வைத்தியசாலை மருத்துவ நிலையம் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் காந்தி மைதானம் பொட்டல் பகுதியில் இயங்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| பெண் மருத்துவ அதிகாரி | – 1 | |
| ஆண் செவிலி உதவியாளர் | – 1 | காலியாக உள்ள பணியிடங்கள் |
| பெண் செவிலி உதவியாளர் | – 1 | |
| அலுவலக உதவியாளர் | – 1 | |

## 18) பொது நூலகங்களும் படிப்பகங்களும்:–

இந்நகராட்சியால் பொது நூல் நிலையம் ஏதும் பராமரிப்புச் செய்யப்படவில்லை. இந்நகரில் காமராஜர் மாவட்ட நூலக ஆணைக்குழு நிர்வாகத்தில் ஒரு நூல் நிலையம் மட்டும் மலையரசன் கோவில் கிழமேல் தெருவில் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியால் வசூலிக்கப்படும் நூலக வரி காலமுறைப்படி நூலக ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

## 19) பொது சுகாதாரப்பிரிவு அலுவலர்கள்:–

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்கண்டவாறு அலுவலர்களும், பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

| | | பணியிடங்கள் ஒதுக்கீடு | காலியிடம் |
|---|---|---|---|
| 1)நகர் நல அலுவலர் பணியிடம் | – | 1 | – – |
| 2) துப்புரவு ஆய்வர்கள் | .. | 6 | – – |
| 3) துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் | .. | 10 | 2 |
| 4) காவலர் | .. | 1 | 1 |
| 5) லாரி ஓட்டுநர் | .. | 4 | – – |

| | | | |
|---|---|---|---|
| 6) தச்சர் | .. | 1 | 1 |
| 7) தச்சரின் உதவியாளர் | .. | 1 | 1 |
| 8) லாரி கிளினர் | .. | 1 | – – |
| 9) கலப்பு உர தொழிலாளர் | .. | 4 | 3 |
| 10) துப்புரவுப்பணி தொழிலாளர்கள் | .. | 151 | 36 |
| 11) மலேரியா களப்பணியாளர்கள் | .. | 1 | – – |

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.10946/08/எச்3 நாள்: 26.08.2011ன்படி புதியதாக தேசீய ஊரக நகர் நல மையம் உருவாக்கப்பட்டு 7.9.2011 முதல் காந்தி மைதானத்தில் செயல்பட்டு வருகிறது.

பெண் மருத்துவர் அலுவலர் – 1
மருந்தாளுநர் – 1
லேப் டெக்னீசியன் – 1
செவிலியர் – 1
அட்டெண்டர் – 1 என 5 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**<u>20) நோய் தடுப்புத்திட்டம்</u>**

அறிக்கையாண்டில் பொது திடக்கழிவு மேலாண்மை மற்றும் டெங் கு காய்ச்சல் குறித்து சுகாதார நலத்தினைப் பின்பற்ற நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் விழிப்புணர்வு பிரச்சாரப் பணி செய்துள்ளனர். போலியோ தடுப்புத்திட்டம், எய்ட்ஸ், மலேரியா வயிற்றுப் போக்கு நோய் தடுப்பு பற்றியும் பொது மக்களிடம் விழிப்புணர்வுகள் ஏற்பட்டது 10.03.2019 தேசீய போலியோ சொட்டு மருந்து முகாம் நகரில் 24 மையங் களில் சிறப்பாக நடத்தப்பட்டன. 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் விடுதலின்றி முகாமில் பங்கேற்றனர். அறிக்கை ஆண்டில் 100 சதவீதம் குறியீடு அடையப்பட்டது.

**<u>21) குடும்பக் கட்டுப்பாடு திட்டம்</u>**

அறிக்கை ஆண்டில் ஏதுமில்லை

**<u>22 ) பிறப்பு,இறப்பு பதிவு:–</u>**

இந்நகராட்சியில் மக்கள் தொகை 2011 ம் ஆண்டு கணக்கெடுப்புப்படி 87,722 ஆகும். அறிக்கை ஆண்டில் பிறப்பு விகிதம் 34.5ரூ ஆகவும், இறப்பு விகிதம் 7.14ரூ ஆகவும் உள்ளது. பிறப்பு இறப்பு பதிவுக்கு என இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு ஆய்வர்கள் பிறப்பு இறப்பு பதிவாளர்களாகவும் பணி செய்து வருகிறார்கள். நகரில் 6 இடங்களில் பிறப்பு இறப்பு பதிவு பணி 1969ம் வருடத்திய மைய அரசின் பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தின்படியும், 2000ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் பிறப்பு இறப்பு விதிகளின்படியும் நடைபெற்று வருகிறது. அறிக்கை ஆண்டில் 2354 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் 815 இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் இறந்து பிறந்தவை 2 இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளன.

**<u>23) மகப்பேறு நிலையங் கள்:–</u>**

ஒப்பளிக்கப்பட்ட பணியிடத்தின்படி நடப்பு ஆண்டில் 5 மகப்பேறு துணை நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. நடப்பு நிதியாண்டில் மகப்பேறு நிலையத்தில். கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் உள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1) பெண் மருத்துவ அலுவலர் | .. | 1 (15.06.2004 முதல் காலியாக உள்ளது) |
| 2) நலப்பார்வையாளர் | .. | 1 (09.05.2005 முதல் காலியாக உள்ளது) |
| 3) மகப்பேறு உதவியாளர்கள் | .. | 5 (2 பணியிடம் காலியாக உள்ளது) |

4) ஆயாக்கள் .. 5 ( 1 பணியிடம் காலியாக உள்ளது)

5) இரவு காவலர் .. 1 (பணியிடம் காலியாக உள்ளது)

அ) கீழ்க்கண்ட 4 (நான்கு) இடங்களில் தாய்சேய் துணை நிலையங்கள் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

1) □□□□□□ □□□□ தாய்சேய் நல நிலையம் தலைமை□□□□□
(தலைமை விடுதியாக செயல்பட்டு வருகிறது)

2) சொக்கலிங்கபுரம் தாய்சேய் நல நிலையம்

3) புதிய பேருந்துநிலைய தாய்சேய் நல நிலையம்

4) பழைய பேருந்து நிலைய தாய் சேய் நல நிலையம்

<u>24) தீடீரெனத் தாக்கும் தொற்று நோய்கள்</u>

<u>இறப்பு விகிதம்:—</u>

அறிக்கையாண்டில் பதிவான இறப்பு 815 இறப்பு வீதம் ஆயிரத்துக்கு 7.14 சதவீதம் என உள்ளது.

அ) பல்வேறு நோய்கள் மூலம் ஏற்பட்ட இறப்பு வீதம்

| | | |
|---|---|---|
| 1) வாந்திபேதி | .. | இல்லை |
| 2) காய்ச்சல் | .. | —— |
| 3) வயிற்றுப்போக்கு | .. | இல்லை |
| 4) காசநோய், புற்றுநோய், ஆஸ்துமா | .. | 2 |
| 5) பிற காரணங்கள் | .. | 813 |
| மொத்தம் | .. | 815 |

ஆ) வாந்திபேதி:—

நகரில் வாந்தி பேதி ஏதும் ஏற்படவில்லை. இருந்த போதிலும் ஒவ்வொரு ஆண்டும், முன்னெச்சரிக்கையாக எல்லா தடுப்பு முறைகளும் கையாளப்பட்டு வருகிறது. வயிற்றுப் போக்கு இந்நகர் பகுதியில் யாரும் பாதிக்கப்படவில்லை. இறப்பு ஏதும் இல்லை. மேலும் கிருமி நாசினிகள் போதுமான அளவு கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இ) பெரியம்மை:—

அறிக்கையாண்டில் பெரியம்மை நோயினால் தாக்குண்டு இறந்தவர்கள் எவரும் இல்லை.

ஈ) குடற்காய்ச்சல் (டைபாயிடு):—

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவருமில்லை.

உ)காசநோய், புற்றுநோய் மற்றும் ஆஸ்துமா :—

நடப்பு ஆண்டில் காசநோயால் 2 நபர்கள் இந்நோயினால் இறந்துள்ளார்கள், புற்றுநோய் மற்றும் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டவர்க ஒருவருமில்லை.

ஊ) தொண்டை நோய் (டிப்திரியா)

நடப்பு ஆண்டில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவருமில்லை.

எ) தொழுநோய்:—

இந்த நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க அரசு மருத்துவமனையில் ஒரு தனிப்பிரிவு இயங்கி வருகிறது.

ஏ) பிளேக் நோய்:—

இந்நகரில் பிளேக் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எவருமில்லை.

ஐ) சிக்குன்னியா நோய் :

அறிக்கையாண்டில் தமிழகத்தில் சிக்குன்யா நோய் மற்றும் டெங் கு பரவுவதை தவிர்க்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அதன்படி அனைத்து வீடுகளுக்கும் கழிவுநீர் நச்சுத் தொட்டி காற்று போக்கியால் கொசுவலை கட்டப்பட்டது. டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையாக ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டு தினமும் காலை அபேட் மருந்தும் மதியம் கழிவுநீர் மருந்து PENTHION மற்றும் மாலை கொசுபுகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. சிக்குனியா மற்றும் டெங்கு நோய் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டது . நகரில் சிக்குன்குனியா, டெங் கு நோய் அறிக்கை ஆண்டில் ஏதுமில்லை.

**ஓ. மூளைக்காய்ச்சல்/யானைக்கால் வியாதி:—**

இந்நகரில் மூளைச்சாய்ச்சல்/யானைக்கால் வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் இல்லை. கொசுக்கடியினால் நேரக்கூடிய தொல்லைகளைத் தடுத்து கோயம்புத்தூர் அரசு கொசுக்கடி ஆராய்ச்சியாளர் வகுத்த **29.12.1984**ம் தேதிய **1364** (பொது நலம்) எண் அரசு ஆணையில் ஒப்புதல் செய்துள்ள திட்டம் இது. இத்திட்டத்திற்கான செலவாகும் தொகையில் **25** சதவீதம் அரசினரிமிருந்து மானியமாக கிடைக்கிறது. துப்புரவு ஆய்வாளர்களின் மேற்பார்வையில் கொசு மருந்து தெளிப்பதற்கு **75** கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

இத்திட்டம் கோயம்புத்தூர் அரசு கொசுக்கடி ஆராய்ச்சியாளராலும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்நகரை ஆறு பகுதியாகப் பிரித்து வாரத்திற்கு ஒரு பகுதி வீதம் ஒவ்வொரு பகுதியிலுள்ள நீர்த்தேக்கங்களிலும், கொசு வளரும் மற்ற இடங்களிலும் கொசுப்புளு ஒழிப்பு மருந்து அபேட் தெளிக்கப்பட்டுள்ளது.. இது மட்டுமில்லாமல் வடிகால் தேக்கமின்றி தண்ணீர் ஓடுவதற்கு வாறுகால்கள் தோண்டி விட்டும் கீழ் மேடுகளை மூடியும் இனப் பெருக்கம் தடுக்கப்பட்டு வந்துள்ளது. அதற்கான வேண்டிய Bacticide மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிப்பான் **16+6** மூலம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

மலேரியா மற்றும் டெஙகு காய்ச்சல் நோய் இந்நகரில் பரவவிடாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மூளைக்காய்ச்சல்/யானைக்கால் வியாதி நகரில் இல்லை.

**25) பொது சுகாதாரப்பிரிவு:—**

இந்நகரில் **6** துப்புரவு ஆய்வர்களின் கட்டுப்பாட்டின் கீழ் **8** துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்களின் நேரடிப் பார்வையில் **117** துப்புரவுப் பணியாளர்கள் துப்புரவுப் பணிகளை செய்து வந்தனர்.

இந்நகரில் உள்ள அனைத்து பொதுக் கழிப்பிடங்களும் நன்கு பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. தெருக்களில் சேகரிக்கப்பட்ட குப்பை மற்றும் இதர கழிவு பொருட்கள் **36** டம்பர் பின் மூலம் **3** டம்பர் பிளசர் லாரி மற்றும் **3** டிப்பர் லாரி மூலம் கலவை உரம் தயாரிக்கப்படும் உரக்கிடங் கிற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

**26) கலவை உரம்:—**

இந்நகர் சுக்கிலநத்தம் ரோட்டில் 4.00 ஏக்கர் அளவுள்ள நிலத்தில் நகரில் சேகரிக்கப்படும் குப்பைகள் அனைத்தும் கொட்டப்பட்டு வருகிறது. கலவை உரக்கிடங்கிற்கு மேலும் இடவசதி தேவைப்படுவதால் 14.77 ஏக்கர் நிலம் புதிதாக வாங்கப்பட்டு விண்ரோஸ் அமைக்கப்பட்டு உள்ளது.

**27) பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களும் தளவாடங் களும்:—**

**அ) பொது சுகாதாரப்பிரிவுக்கு கீழ்க்கண்ட விபரப்படிக்கு வாகனங் கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.**

1) டிப்பர் லாரி .. 3
2) டம்பர் பின் லாரி .. 3
3)தள்ளு வண்டிகள் .. 100 ட்ரை சைக்கிள்கள்
4) டம்பர் பின்கள் .. 36
5) Compactor Lorry .. 1

நாள்தோறும் தெருக்கள் கூட்டப்பட்டு வாறுகால்கள் சுத்தம் செய்யப்பட்டது. வாரம் ஒருநாள் புதன்கிழமை தோறும் சிறப்பு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு குப்பைகள் சேகரிக்கப்பட்டு மற்றும் வாறுகாலில் மண்கள் அகற்றப்பட்டு உரக் கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுவதால் நகராட்சியில் சுகாதாரம் நல்லமுறையில் பேணிக் காக்கப்பட்டு வருகிறது. தினந்தோறும் நகரில் மேற்கண்ட வாகனங் கள் மூலம் 39.5 ஆ.கூ திடக்கழிவு சேகரிப்பு செய்யப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆ) கழிப்பிடங் கள்:—**

நகரில் 34196 குடியிருப்பு வீடுகள் உள்ளன. இவைகளில் 30040 வீடுகளில் கழிப்பிடங்கள் இருந்தன. மீதியுள்ள வீடுகளில் போதுமான இடவசதிகள் இல்லாததால் மல அறைகள் கட்டப்படவில்லை. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3113 வீடுகளுக்கு கழிப்பறை கட்ட இலுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 4156 □□□□□□□□□□ □□□□□□□□□□□□□ அன்றாட துப்புரவுப் பணியோடு எளியோர் குடியிருப்புகளையும் துப்புரவு குறைவான பிற இடங் களையும் அவ்வப்போது துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

**இ )உணவு பண்ட கலப்பட தடுப்புச் சட்டம் :—**

தற்போது 2006ம் ஆண்டைய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறையில் கீழ் கடந்த 05.08.2011 முதல் தனியாக துறை உருவாக்கப்பட்டு அதன் மூலம் உரிமம் வழங் குதல், பதிவு செய்தல் மற்றும் உணவு பாதுகாப்பு தரக்கட்டுபாட்டின் கீழ் விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வலுவலகம் நகராட்சி அலுவலகத்தில் இயங்கி கொண்டு வருகிறது.

**ஈ) தொழில்கள் மற்றும் அச்ச அருவருப்பு வாணிகங் கள்:—**

இயந்திர ஆற்றலால் தொழில்கள் நடக்க வேண்டிய இடங்கள் இந்நகராட்சியில் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் விளம்பரப்படுத்தப்பட்டு இருக்கின்றன. நகரில் அச்சம் மற்றும் அருவருப்பு வாணிபகங்களுக்கென தனிப்பட்ட இடவசதிகள் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. ஆனால் சில இடங்களில்தான் சில வாணிபகங்கள் செய்யப்பட வேண்டும்

என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உரிமையாணை வழங்கப் போதுமான அளவு கட்டுப்பாடு விதிகள் அமுல் செய்யப்பட்டன.

அறிக்கை ஆண்டில் அச்சம் அருவருப்பு வாணிபகங்கள் நடத்த உரிமையாணை கோரி 1765 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. இந்த வகையில் வரப்பெற்ற வரவினம் ரூ.13.00 லட்சம் ஆகும். அனைத்து தொழில் நிலையங்களும் நகர் நல அலுவலராலும், துப்புரவு ஆய்வர்களாலும் அடிக்கடி பார்வையிட்டு அப்போதைக்கப்போது ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**<u>28) சந்தைகளும் விழாக்களும்:–</u>**

அறிக்கை ஆண்டில் தனிப்பட்டவர்களால் சந்தை எதுவும் நடத்தப்படவில்லை. நகராட்சி அலுவலகம் எதிரே உள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் எண்டோமெண்ட்டுக்குச் சொந்தமான இடத்தில் நகராட்சி வாரச் சந்தை குத்தகை மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு ஆடு, கோழி முதலியன விற்பனைக்கு வரப்பெறுகின்றன. அறிக்கை ஆண்டில் வாரச்சந்தை மூலம் ரூ.8,01,000/– ஆண்டு வருமானமாக பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆனித் திங்கள் நகரின் பிரசித்தி பெற்ற மீனாட்சி–சொக்கநாதர் ஆலயத்தின் தேர்திருவிழா அனைத்து மக்களாலும் கொண்டாடப்படுகிறது .

**<u>29)குடிநீர் விநியோகம்:</u>**

இந்நகராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 11.06.1973ம் தேதி துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் 31.12.1976 முடிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. 01/01/1977ம் தேதி முதல் இந்நகராட்சியிடம் பராமரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டு தற்போது நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அருப்புக்கோட்டை நகராட்சிக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் திருப்புவனத்திலுள்ள வைகை ஆற்றிலிருந்து எடுக்கப்பட்டு 30 குதிரை திறன் கொண்ட பம்ப் மூலம் அருகிலுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு அங்கிருந்து சிமிண்ட் குழாய்கள் மூலம் (ஆர்.சி.சி.பைப்) கட்டங்குடியிலுள்ள நீர் உந்து நிலையத்தை வந்தடைகிறது. மேலும் இந்நகராட்சியில் வைகை ஆற்றில் திருப்புவனம் தலைமையிடத்திலிருந்து நீர் சேகரக் கிணறு மூலம் அங்காடிமங்கலம் கிராமம் அருகே அமைந்துள்ள கிணறு மூலம் தண்ணீர் இறைத்து குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கட்டங்குடியில் 60 குதிரை திறன் கொண்ட பம்ப் மூலம் தண்ணீர் உந்தப்பட வார்ப்பு குழாய் மூலம் அருப்புக்கோட்டையில் உள்ள மதுரை சாலையில் உள்ள 9.00 இலட்சம் கொள்ளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளுக்கு வந்தடைகிறது.

**<u>தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த்திட்டம், வல்லநாடு (CWSS)</u>**

தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த்திட்டம், வல்லநாடானது (ஊறுளுளு) அருப்புக்கோட்யைிலிருந்து 140 கிமீ தொலைவில் இருந்து பெறப்படுகிறது. தாமிரபரணி ஆற்றிலிருந்து 18.56 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமுல்படுத்தி குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 49.50 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 35.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைப்பதனை கொண்டு நகர் பகுதி முழுவதும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

மேலும் அருப்புக்கோட்டை நகர் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்யும் பொருட்டு புதியதாக கூடுதல் திட்டமாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் 21.06.2017 அன்று சட்டமன்றப் பேரவையில்

மானியக் கோரிக்கை எண் 34ல் குடிநீர் திட்டஙகள் குறித்து அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண் 36ல் அறிவித்த சாத்தூர், விருதுநகர் மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சிகளுக்கு மட்டும் தனியாக கூட்டுக்குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அனுமதி அளித்ததன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் திட்டபிரேரணை தயார் செய்து அரசுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

வைகை குடிநீர் திட்டம் மற்றும் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் ஆகிய இரண்டு திட்டஙகளில் இருந்தும் கிடைக்கும் குடிநீரினைக்கொண்டு நகர் பகுதி முழுவதும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. மதுரை சாலையில் அமைந்துள்ள 9.00 இலட்சம் கொள்ளவு கொண்ட ஒரு தொட்டியிலிருந்து மேல் மட்டப் பகுதியிலுள்ள பகிர்மானக் குழாய்களுக்கும், மற்றொரு தொட்டியிலிருந்து கீழ்மட்டம் பகுதியிலுள்ள பகிர்மான குழாய்கள் மூலம் புளியம்பட்டி, திருநகரம், தெற்குத்தெரு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. அருப்புக்கோட்டை குடிநீர் திட்டம் குறைந்த பணியாளர்களைக் கொண்டு நகராட்சியால் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கரும்புலி வீரப்பன் பூஙகாவில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளவில் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, சொக்கலிங்கபுரம் மற்றும் வெள்ளைக்கோட்டை மேட்டுப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அஜீஸ்நகர் பூஙகாவில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளவில் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, அஜீஸ்நகர் மீனாம்பிகை நகர் மற்றும் அதை சுற்றிஉள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. ஜவகர்சஙகம் பகுதியில்அமைந்துள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளவில் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, ஜவகர்சஙகம், உஜ்ஜிசாமி கோவில் தெரு, மயிலாடும்தெரு மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. அந்திகடைபொட்டல் பகுதியில்அமைந்துள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளவில் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, புளியம்பட்டி மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளவில் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, இராமசாமிபுரம் போலீஸ்குவாட்டர்ஸ் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

மேலும் இந்நகராட்சிக்கு எல்லைக்கு உட்பட்ட எம்.டி.ஆர் நகர், காந்தி நகர், திருவள்ளுவர் காலனி, ஜோதிபுரம், எம்.டி.ஆர் நகர் கிழக்குப் பகுதி மற்றும் வடக்குப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவையான அளவு பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கு நேதாஜி சாலையில் 10 லட்சம் லிட்டர் கொள்ளைவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. புளியம்பட்டி பகுதியில் (போலீஸ் குவாட்டர்ஸ் பின்புறம்) 10 லட்சம் லிட்டர் கொள்ளைவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டுள்ளது.

**30) குடிநீர்திட்டத்தின் முக்கிய விவரங் கள்:–**

**அ) குடிநீர் குழாய் இணைப்புகள்**

| | | |
|---|---|---|
| (அ) தற்போதுள்ள மொத்த பொதுக்குழாய்கள் | .. | 105 |
| (ஆ) வீட்டு உபயோக இணைப்புகள் | .. | 14233 |
| (இ) வீட்டு உபயோகமற்ற இணைப்புகள் | .. | 583 |
| மொத்த இணைப்புகள் | .. | 14921 |

**ஆ) வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு:**

1000 லிட்டருக்கு ரூ.6/– வீதம் வசூலிக்கப்படுகிறது. காலாண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் கட்டணம் ரூ.195/– ஆக வசூலிக்கப்படுகிறது.

**இ) வீட்டு உபயோகமற்ற இணைப்புகள்:**

ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.24/– வீதம் காலாண்டிற்கு குறைந்த பட்ச கட்டணமாக ரூ.735/– வசூலிக்கப்படுகிறது. இவற்றில் உணவகம், சாயப்பட்டரை, அரிசி ஆலை, கல்யாண மண்டபம், ஹோட்டல் ஆகியவற்றிற்கு குறைந்தபட்சம் 60,000 லிட்டருக்கு காலாண்டிற்கு ரூ. 1455/– வசூலிக்கப்படுகிறது.

**ஈ) குடிநீர் நிதி வரவினம்**

குடிநீர் இணைப்புகள் மூலம் 2018–2019 அறிக்கை ஆண்டில் ரூ.145.21 லட்சம் கேட்பில் ரூ.114.93 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிடங்களின் ஆண்டு வாடகை மதிப்பில் 9ரூ தண்ணீர் வரியாக ஆண்டிற்கு வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு தண்ணீர் மற்றும் சாக்கடை வரி வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

ரூ. (லட்சத்தில்)

| | குடிநீர் கட்டணம் | குடிநீர் மற்றும் வடிகால் வ□□ |
|---|---|---|
| 2014–2015 | ரூ.121.28/– | ரூ.76.20/– |
| 2015–2016 | ரூ .123.62/- | ரூ.78.02/– |
| 2016–2017 | ரூ .120.94/- | ரூ.76.77/– |
| 2017–2018 | ரூ.1129.17/– | ரூ.80.24/– |
| 2018–2019 | ரூ.114.93/– | ரூ.103.56/– |

கடந்த மூன்று ஆண்டுகளில் குடிதண்ணீர் மற்றும் வடிகால் கணக்கில் வந்த நிகர வரவும் செலவும் கீழே தரப்பட்டுள்ளன. .

| | | வரவும் | செலவும் |
|---|---|---|---|
| 2014–2015 | .. | ரூ.2,63,03,596/– | 3,24,86,882/– |
| 2015–2016 | .. | ரூ.2,68,70,691/– | 34795551/– |
| 2016–2017 | .. | ரூ .27303695/- | 3684288/– |
| 2017–2018 | .. | ரூ.9,25,76,563/– | 168055523/– |
| 2018–2019 | .. | ரூ.3,35,16,676/– | 3,33,55,011/– |

**31) இதர குடிநீர் வசதி:–**

அ) இந்நகராட்சியில் 735 எண்ணம் அடிகுழாய்களும், 503 எண்ணம் மினிபவர் பம்புகளும் பொருத்தப்பட்டு தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

**ஆ) நகராட்சி வண்டி ( டாஙகர்) மூலம் குடிதண்ணீர் வழஙகுதல்:**

நகராட்சி டிராக்டர் மூலம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகிர்மானக் குழாய் இல்லாத பஸ்ஸ்டாண்டு, சந்தை, அரசு விடுதிகள், மருத்துவமனை, சப்ஜெயில் மற்றும் அத்தியாவசிய இடங்களுக்கும் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும் டிஎன்67ஏ 9212 தண்ணீர் லாரி டாங்கர் (10,000 லிட்டர் கொள்ளளவு) டிஎன் 67பி 8965 டேங்கர் 6000 லிட்டர் கொள்ளவு மூலம் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளுக்கு மேல்நிலைத் தொட்டியில் தண்ணீர் பிடித்து தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**32) ஸ்வர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டம்:–**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**அ) பயிற்சி**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**ஆ) உள் கட்டமைப்பு**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**இ) நகர்ப்புற மகளிர் சுய உதவிக்குழு திட்டம் (UWSP) (சுழல் நிதி)**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**ஈ) நகர்ப்புற மகளிர் சுய உதவிக்குழு திட்டம் (UWSP) (மான்யத் தொகை)**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**உ) நகர்ப்புற சமுதாய முன்னேற்ற கூட்டமைப்பு (UCDN)**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**ஊ) கூலி வேலை வாய்ப்புத் திட்டம்**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**எ) வால்மீகி அம்பேத்கார் ஆவாஸ் யோஜனா: (Vambay)**

நிதியாண்டில் இவ்வலகின்கீழ் நிதி வரப்படவில்லை.

**33. அறிக்கையாண்டில் நடைபெற்ற பணிகள் விபரம்**

**இடைவெளி நிரப்பும் நிதிInfra Gap Filling Fund 2017 –18**

